வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 27.05.2026 புதன்கிழமை இதழ் : 141 பக்கங்கள் : 08

# வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் பெருமளவு காணி விரைவில் விடுவிப்பு!

## விடுவிக்கமுடியாத காணிகள் குறித்து உரிமையாளர்களுடன் பேசி தீர்வு காண்போம் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்



யாழ்ப்பாணம், மே. 27

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள பெருமளவான காணிகளை விடுவிக்க மிக விரைவில் நடவடிக்கை எடுப்போம் எனக் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணி விடுவிப்பு தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் காணி மக்களுக்கே என்பதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும். அந்த காணிகளை விடுவிக்கும் முகமாக உயர் மட்டக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு காணி விடுவிப்பு

07

# பலாலி கிழக்குக் காணிகளை முதற்கட்டமாக விடுவியுங்கள்!

## மாவட்ட செயலர் கோரிக்கை



யாழ்ப்பாணம், மே. 27

யாழ்ப்பாணம் பலாலி கிழக்கு பகுதியில் கடந்தஹ் 36 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தனியார் காணிகளை முதல் கட்டமாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாவட்ட செயலர் ம.பிரதீபன் பாதுகாப்பு பிரதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பலாலி கிழக்கில் உள்ள விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு கள ஆய்வொன்றை மேற்கொண்டார்.

இதன்போதே மாவட்ட செயலர் இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தின் காணிகளில் இதுவரை 21,280 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று

07

# வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்துக்கு விஜயம் செய்த பாதுகாப்பு பிரதி அமைச்சர்

## சில காணிகள் விடுவிக்கப்படும் சாத்தியம்?



யாழ்ப்பாணம், மே. 27

வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 36 வருடங்களுக்கு மேலாக இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக பாதுகாப்பு பிரதி

07

# ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு அமைய மக்களின் காணிகளை விடுவிக்கவேண்டும்

## பாதுகாப்பு பிரதி அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 27

“மக்களின் காணிகள் மக்களுக்கே” என்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உறுதிமொழிக்குச் செயலுரு வழங்கும் வகையில், பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விரைந்து விடுவிப்பதற்கான

07



# இந்திய தூதுவருடன் நாமல் சந்திப்பு!

கொழும்பு, மே. 27

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர்

07

# இலங்கையில் கட்டுமானச் செலவுகள் அதிகரிப்பு; பழைய வீடுகளை புனரமைப்பதில் மக்கள் ஆர்வம்!

கொழும்பு, மே. 27

இலங்கையின் வீடமைப்பு மற்றும் காணி விற்பனையில் தற்போது ஒரு வியத்தகு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கட்டுமானப் பொருள்களின் விலை உயர்வு மற்றும் அதிகப்படியான செலவுகள் காரணமாக, மக்கள் புதிதாக வீடுகளைக் கட்டுவதைத் தவிர்த்து, ஏற்கனவே சிறிய அல்லது பழைய கட்டடங்களைக் கொண்ட நிலங்களை வாங்கி அவற்றை புனரமைக்க அதிக ஆர்வம் காட்டி வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லங்கா ப்ரொப்பர்ட்டி வெப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்

07

# யாழ்.மாநகரசபை காணியை சொந்தமாக்கியுள்ள தனிநபர்!

## மோசடிக்கு உதவிய அதிகாரிகள் மீது விசாரணை

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் உத்தரவு

யாழ்ப்பாணம், மே. 27

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான காணியை வெளிப்படுத்தல் உறுதி முடித்து மோசடி செய்ய உதவிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வடமாகாண

07



# பழைய முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்

## 42 கட்சிகள் சிவில் அமைப்புகள் இணைந்து ஏகமனதாகப் பிரகடனம்

கொழும்பு, மே. 27

நீண்ட காலமாகத் தாமதமடைந்து வரும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துவது மற்றும் அதற்கான தேர்தல் முறைமைகள் குறித்து, அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுக்கு

07

# மாகாணசபைத் தேர்தல் நடக்கும் அதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு!

## அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, மே. 27

“மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இதற்காக ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.” என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புகையிலை பாவனையால் ஆண்டு தோறும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

## தேசிய புகையிலை அதிகார சபை தகவல்

கொழும்பு, மே. 27

புகையிலை பயன்பாட்டால் ஆண்டுதோறும் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழப்பதாக தேசிய புகையிலை அதிகார சபை தெரிவித்துள்ளது.

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அதன் தலைவர் வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க, புகையிலைப் பயன்பாட்டால் 200 இற்கும் மேற்பட்ட நோய்கள் ஏற்படுவதாகக் கூறினார்.

மேலும், புகையிலை காரணமாக வருடத்துக்கு சுமார் 214 பில்லியன் ரூபாய் பொருளாதார இழப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலங்கையில் தினமும் மில்லியன் கணக்கான சிகரெட் பில்டர்கள் சுற்றுச்சூழலுக்கு வெளியேற்றப்படுவதால் ஆரோக்கியத்திற்கும் சூழலுக்கும் கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஆசாத் மௌலானாவின் வாக்குமூலத்தை நீதிமன்றில் சாட்சியமாக ஏற்கமுடியாது!

## சுரேஷ் சாலேயின் சட்டத்தரணி சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 27

2019ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியில், முன்னாள் அரச உளவுத்துறைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேவுக்குத் தொடர்பு இருப்பதாக ஆசாத் மௌலானா வழங்கிய வாக்குமூலத்தை, குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தாமல் நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என அவரது தரப்பு சட்டத்தரணி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் பசான் அமரசேன முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சுரேஷ் சாலே சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ இந்த உத்தியோகபூர்வ சமர்ப்பிப்பை மேற்கொண்டார்.

பிரான்சின் பாரிஸ் நகரில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் பதிவு செய்யப்பட்ட ஆசாத் மௌலானாவின் சாட்சியமானது, மூன்றாம் தரப்பின் ஊடாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் அதனை நம்பகத்தன்மை உடையதாகக் கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இருதார மணம் புரிந்த குற்றச்சாட்டில் இலங்கையிலிருந்து தப்பியோடித் தேடப்பட்டு வரும் ஒருவரான ஆசாத் மௌலானாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேயை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக் கோரும் முந்தைய உத்தரவை இரத்து செய்யுமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் விடுத்த கோரிக்கைக்குச் சட்டத்தரணி கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

இரு தரப்பு விவாதங்களையும் பரிசீலித்த நீதவான், சுரேஷ் சாலேயை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவது மற்றும் அவர் அறிக்கை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளார். (அ)

# 40 நாடுகளுக்கு இலவச விசா; திங்கள் முதல் நடைமுறைக்கு!

கொழும்பு, மே. 27

40 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்க சுற்றுலா மேற்கொள்வதற்கான இலவச விஸா வழங்கும் நடைமுறை நேற்று முன் தினம் முதல் அமுல்படுத்தப்படுவதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி அமைச்சரவையில் வழங்கப்பட்ட அனுமதிக்கு அமைய, குடிவரவு விதிமுறைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு பாராளுமன்ற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ், தகுதியுள்ள வெளிநாட்டு பிரஜைகள், இரட்டை நுழைவு அனுமதியுடன் 30 நாள்களுக்குச் செல்லுபடியாகும் இலவச இலத்திரனியல் பயண அங்கீகாரத்தை பெற முடியும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஐ. சமிந்த பத்திராஜா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பஹ்ரைன், பெலாரஸ், பெல்ஜியம், கனடா, சீனா, செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, ஈரான், இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், கஜகஸ்தான், குவைத், மலேசியா, நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நோர்வே, ஓமான், பாகிஸ்தான், போலந்து, கட்டார், ரஷ்யா, சவுதி அரேபியா, தென் கொரியா, ஸ்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரஜைகளுக்கே இந்த விசேட திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாலைதீவு, சீஷல்ஸ் மற்றும் சிங்கப்பூர் நாட்டினர் இந்த செயலாக்கத்தை தொடர்ந்து கட்டணமின்றி பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப 30 நாள் காலத்திற்குப் பிறகும் இலங்கையில் தங்கியிருக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், அதற்கான கட்டணத்தைச் செலுத்தி விஸா நீட்டிப்புக்கு விண்ணப்பிக்கலாம் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருள் விவகாரம் 23 பிக்குகளுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே. 27

தாய்லாந்திலிருந்து போதைப் பொருள்களை இலங்கைக்குக் கடத்தி வந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 23 பிக்குகளை எதிர்வரும் ஜூன் மாதம் 09ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிக்குகள் நேற்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இணையவழி முறைமையூடாக முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# அஸ்வெசும நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்க!

## பிரதேச செயலாளர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, மே. 27

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கோரி, பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்களின் சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் முதற்கட்டத் தரவுகளைப் புதுப்பிப்பதிலும், தற்போது நடைபெற்று வரும் கணக்கெடுப்புச் செயல்முறைகளிலும் பலதரப்பட்ட சிக்கல்கள் நீடிப்பதன் காரணமாகப் பொதுமக்களும் அதிகாரிகளும் கடுமையான அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அஸ்வெசும கடமைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பணிப்பாய்வு முகாமைத்துவ மென்பொருள் கட்டமைப்பில் உள்ள நீண்ட காலப் பிழைகள் காரணமாகத் தரவுகள் காணாமற்போவதாகவும், மொபைல் செயலிகள் மூலம் வீடுகளின் இருப்பிடங்களை அடையாளப்படுத்துவதில் தவறுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களை முதற் கட்டக் கணக்கெடுப்பில் ஈடுபடுத்தியமையால் கணினியில் தவறான தரவுகள் உள்ளிடப்பட்டு, தகுதியற்ற குடும்பங்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, தகுதியான பல குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

# வாரத்தில் நான்கு நாள்கள் மட்டும் வேலை; புதிய முறையை செயல்படுத்த கோரிக்கை

கொழும்பு, மே. 27

இலங்கையில் வாரத்தில் நான்கு நாள்கள் மாத்திரம் வேலை செய்யும் புதிய முறையை அறிமுகப்படுத்துமாறு தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தொழிலாளர் அமைச்சின் செயலாளர் எஸ். எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இக்கோரிக்கைகள் தொடர்பாகத் தொழிலாளர் திணைக்களம் ஒவ்வொரு நிறுவனங்களின் தன்மைக்கு ஏற்ப தனித்தனியாக ஆராய்ந்து அடுத்த கட்ட முடிவுகளை எடுக்கும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் எரிபொருள் மற்றும் மின்சக்தி பற்றாக்குறையைக் குறைக்கும் நோக்கில், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு மீண்டும் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளதாகச் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை எனவும், அது குறித்து இதுவரை இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெளிவுபடுத்தினார். (அ)

# நிலக்கரி கொள்வனவு மோசடி; 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, மே. 27

நிலக்கரி கொள்வனவு கொடுக்கல் வாங்கல் முறைகேடுகள் குறித்து புலனாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால், இதுவரை சுமார் 20 அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் பி.வி. பந்துலசேன தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் கிஹான் குலதுங்க தலைமையிலான, முழு அதிகாரமும் கொண்ட இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரை மொத்தம் 28 உத்தியோகபூர்வ முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இம் முறைப்பாடுகள் தொடர்பான சாட்சியங்களை விசாரணை செய்யும் பணிகள் அடுத்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

# யாழில் ரில்வின் சில்வா வெளியிட்ட கருத்து; தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எதிர்ப்பு

கொழும்பு, மே. 27

மாகாண சபைத் தேர்தல்களை இந்த ஆண்டில் நடத்த முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்ட கூற்றுக்கு, "பவ்ரல்" மற்றும் "ஐரெஸ்" ஆகிய முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தங்களின் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில், நிதி மற்றும் சட்டச்சிக்கல்கள் காரணமாக இவ்வாண்டு தேர்தல் நடத்தப்படமாட்டாது என ரில்வின் சில்வா குறிப்பிட்டிருந்தார். இது குறித்து கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ள பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி மற்றும் ஐரெஸ் அமைப்பின் பிரதானி மஞ்சுள கஜநாயக்க ஆகியோர், ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதன்மைக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில், ரில்வின் சில்வாவுக்கு இத்தகைய அறிவிப்பை வெளியிடுவதற்கு எந்தவொரு சட்டபூர்வ அதிகாரமும் இல்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

27.05.2026 புதன்கிழமை

பராபவ வருடம், வைகாசி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**

**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**

– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அநுர குமாரவுக்கும் ஜோசப் விஜய்க்கும் இடையில் உள்ள ஒற்றுமை

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜோசப் விஜய் சந்திரசேகருக்கும் இடையில் ஒற்றுமை ஒன்று இருக்கிறது. அந்த ஒற்றுமை ஒன்றும் அவர்களது கொள்கைகளினாலோ அல்லது நடவடிக்கைகளினாலோ வந்தது அல்ல. அவர்கள் இருவரினதும் ஆட்சி பற்றி இங்கும் அங்கும் எதிர்க்கட்சிகள் செய்கின்ற விமர்சனங்களின் அடிப்படையில் வந்தது.

தேசிய மக்கள் சக்தி தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்தால் அது ஒரு “எல் போர்ட்” அரசாங்கமாகவே இருக்கும் என்று 2024 தேர்தல் பிரசார காலத்தில் எதிரணி தலைவர்கள் குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்கள். ஆனால், நாட்டு மக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஜனாதிபதியாக திசநாயக்கவை தெரிவு செய்ததுடன் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை ஆசனங்களுடன் தெரிவு செய்து ஆட்சியில் அமர்த்தினார்கள்.

நாடு இன்று எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுக்கு சர்வதேச அரசியல் நிலைவரங்களும் பெருமளவுக்கு காரணம் என்ற போதிலும், எதிரணி அரசியல் தலைவர்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உள்ளவர்களின் ஆட்சி முறை அனுபவமின்மையே முக்கிய காரணம் என்று இடையறாது கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்று கூறிக்கொண்டிருப்பதில்எதிரணி அரசியல் தலைவர்கள் ஒரு வக்கிரத்தனமான திருப்தியைக் காண்கிறார்கள் போன்று தெரிகிறது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி கண்டு வருவதைப் பற்றி அவர்களுக்கு கவலை என்று கூறமுடியாது. ஆட்சி அனுபவமற்றவர்களின் அரசாங்கம் விரைவில் வீழ்ச்சியடைந்துவிடும் என்று. அவர்கள் தினமும் “பல்லி” சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக. ஜே.வி.பி. தலைவர்கள் பலரும் அறவே அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் அல்ல, ஆயுதக் கிளர்ச்சிக் காரர்களாக இருந்த அவர்கள் ஜனநாயக அரசியலுக்கு வந்ததற்கு பின்னரான மூன்று தசாப்தங்களுக்குள் நீண்டகாலமாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்ததுடன் ஒரு தடவை அரசாங்கத்திலும் பங்காளிகளாக இருந்திருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டு முதலமைச்சர் விஜய்யைப் பொறுத்தவரை, இரு வருடங்களுக்கு முன்னர் தான் அரசியலில் பிரவேசித்தார். அவருக்கும் அவரது தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் எந்தவிதமான அரசியல் மற்றும் நிருவாக அனுபவமும் கிடையாது.

மற்றைய கட்சிகளில் இருந்து வெளியேறி விஜய்யுடன் சேர்ந்த சில முன்னாள் அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்களை தவிர, இந்த தடவை தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர்கள் அனைவருமே அரசியலுக்கு புதியவர்களே. அவர்கள் மத்தியில் இருந்தே முதலமைச்சர் விஜய் தனது அமைச்சர்களையும் தெரிவு செய்தார்.

அவர் தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஆசனத்தில் அமர்ந்த நாள் தொடக்கம் எதிர்க்கட்சிகளின் குறிப்பாக திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளின் தலைவர்கள் புதிய அரசாங்கத்தின் அனுபவமின்மை குறித்தே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு க. ஸ்ராலினும் அவரது மகன் உதயநிதியும் விஜய்யின் அரசாங்கம் விரைவில் விழ்ச்சியடைந்துவிடும் என்றும் புதிய தேர்தலுக்கு தயாராகுமாறும் தங்களது கழகத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள்.

தேர்தலுக்கு முன்னரும் விஜய்யின் கட்சியினருக்கு அனுபவமில்லை என்றும் வெறுமனே சினிமாக் கவர்ச்சியினால் மாநிலத்தை ஆட்சி செய்ய முடியரது என்றும் ஸ்டாலினும் மற்றைய கட்சிகளின் தலைவர்களும் மக்களிடம் கூறினார்கள். அதைப் பொருட்படுத்தாமல் தமிழ்நாட்டு வாக்காளர்கள் ஏன் “விசில் ஊதினார்கள்” என்பதை பற்றி இவர்கள் சிந்திப்பதாக தெரியவில்லை. இவர்களின் ஊழல் ஆட்சி இனிமேல் வேண்டாம் என்று முடிவெடுத்த மக்கள் விஜய்யின் அனுபவமின்மையைப் பற்றிக் கவலைப்படவில்லை.

# தேர்தலுக்குப் பயம்

**ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி தலைவர்கள், விக்ரமசிங்கவின் பாணியை அப்படியே பின்பற் றுவது போல் தெரிகிறது. ஜே.வி.பி முரண்பா டுகள் நிறைந்த ஒரு சூழ்நிலையில் தன்னைக் காண்கி றது. 1988ஆம் ஆண்டில் முதலா வது மாகாண சபைத் தேர்தலை சீர்குலைப்பதற்காக அது வன்முறை வழிகளைக் கையாண்ட போதி லும், அது வெற்றியளிக்கவில்லை.**



வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை இருக்கும்போது அரசாங்கங்கள் ஒருபோதும் தேர்தல்களை ஒத்தி வைப்பதில்லை. தங்களது அதிர்ஷ்டம் முடிந்துவிட்டது என்பதையும் வெற்றியைப் பாதுகாப்பதற்குத் தேவையான மக்கள் ஆதரவைத் தங்களால் திரட்ட முடியாது என்பதையும் உணரும் போது மட்டுமே, அவை தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான வழிமுறைகளை வகுத்து, இத்தகைய வெட்கக்கேடான செயலுக்கு பல்வேறு சாக்குகளைச் சோடிக்கின்றன.

தோல்விப் பயத்திலேயே நல்லாட்சி அரசாங்கம் 2017ஆம் ஆண்டில் மாகாண சபை (தேர்தல்களை ஒத்திவைத்தது. ஆனால் அதற்கு அடுத்த ஆண்டு நடத்த வேண்டியிருந்த உள்ளூராட்சி தேர்தல்களில் அது மோசமான தோல்வியைச் சந்தித்தது. அந்த தேர்தல் பின்னடைவில் இருந்து அதன் கூட்டணிக் கட்சிகள் இன்னும் முழுமையாக மீளவில்லை.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கமும் 2022 ஆம், 2023 ஆம் ஆண்டுகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைத்தது. இப்போது, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மாகாண சபைத் தேர்தல்களைத் தவிர்ப்பதற்கு சாத்தியமான அனைத்து வழிகளையும் செய்து வருகிறது.

இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாது என்று ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைப்புக் காரியாலயம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரித்தார்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், “டித்வா” சூறாவளி காரணமாக, பேரிடர் நிவாரணத்திற்காக 500 பில்லியன் ரூபாயை ஒதுக்க அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் எனவே இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சீர்திருத்தமும் மாகாண சபைத் தேர்தலுக்குத் தடையாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜே.வி.பி/தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மற்றுமொரு தேர்தல் வாக்குறுதியிலிருந்தும் பின்வாங்கியுள்ளது. அதன் தேர்தல் அறிக்கையான, “வளமான நாடு: அழகான வாழ்க்கை” என்பதில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைந்து ஒரு வருடத்திற்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஒரு “புனிதமான உறுதிமொழியை” அளித்தது. அதில், “தற்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள், மக்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் ஒரு வருடத்திற்குள் நடத்தப்படும்” (பக்கம் 127) எனக் கூறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாமல், அரசாங்கக் கருவூலம் நிரம்பி வழிவதாக அரசாங்கம் பெருமை பேசுகிறது. அப்படியென்றால், மாகாண சபைத் தேர்தலுக்கு நிதி ஒதுக்குவது என்பது மிக எளிதான காரியமாக (பிள்ளை விளையாட்டாக) இருக்க வேண்டும். தற்போதைய பேரிடர் நிவாரணத் திட்டத்தின் காரணமாக மாகாண சபைத் தேர்தலுக்கு நிதியை ஒதுக்க முடியாது என்ற அரசாங்கத்தின் வாதம், 2023 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்காக பொதுஜன பெரமுன/ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கூறிய அபத்தமான சாக்கைப் போன்றதேயாகும்.

தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக் குழு தயாராக இருந்ததுடன், 2023 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைக்க வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சி / பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், அன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிதி நெருக்கடிகள் காரணமாக, தேர்தலை நடத்துவதை விட, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான அத்தியாவசியப் பொருட்களுக்கான செலவுகளுக்கே தமது அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி தலைவர்கள், விக்ரமசிங்கவின் பாணியை அப்படியே பின்பற்றுவது போல் தெரிகிறது. ஜே.வி.பி முரண்பாடுகள் நிறைந்த ஒரு சூழ்நிலையில் தன்னைக் காண்கிறது. 1988ஆம் ஆண்டில் முதலாவது மாகாண சபைத் தேர்தலை சீர்குலைப்பதற்காக அது வன்முறை வழிகளைக் கையாண்ட போதிலும், அது வெற்றியளிக்கவில்லை. அத்துடன் மாகாண சபை முறையை ஒழிப்பதாகவும் சபதம் செய்தது.

ஆனால் இன்று ஜே.வி.பி தலைமையிலான அரசாங்கம் சில தாமதங்களுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பொறுப்பேற்றுள்ளது. 2023 ஆம் ஆண்டில் உள்ளூாராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதை ஜே.வி.பி கடுமையாக எதிர்த்தது. ஆனால் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தான் கடுமையாக எதிர்த்த ஒரு விடயத்தையே அது இப்போது துல்லியமாகச் செய்துள்ளது.

தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சிகளைத் தவிர, ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதற்குப் பொறுப்பாகும். மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்காக 2017 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை அவர்கள் ஆதரித்தனர் அல்லது எதிர்க்காமல் இருந்தனர்.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அக்காலத்தில் கூட்டு எதிர்க்கட்சியில் இருந்த தற்போதைய பொதுஜன பெரமுன தலைவர்கள் ஆகியோர் உள்ளடங்குவர்.

அந்த திருத்தச் சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தின் போது, மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு வழிவகுக்கக் கூடியதாக சில புதிய பிரிவுகள் திணிக்கப்பட்டன. இந்த கூடுதல் சேர்க்கைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்ட அசல் சட்டமூலத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு முரணானவை என்றே பரவலாகக் கருதப்பட்டது.

தேர்தல் சீர்திருத்தமானது, புதிய கலப்பு விகிதாசார முறையின் (mixed proportional system) கீழ் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயத்தை (delimitation) அவசியமாக்கியுள்ளதுடன், தொகுதிகளின் எல்லைகளை மறுவரையறை செய்யும் செயல்முறை முடிவடைய சுமார் ஒரு வருடம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாராளுமன்றம் இந்தச் சிக்கலை நீண்ட காலத்திற்கு முன்பே தீர்த்திருக்க முடியும்.

ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வெளிப்படையான காரணங்களுக்காக இதில் வேண்டுமென்றே காலத்தைக் கடத்தி வருகிறது. எல்லை நிர்ணய செயல்முறை முடிவடையும் வரை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் (Proportional Representation system) கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த பாராளுமன்றம் தீர்மானிக்க முடியும்.

இந்த விருப்பத்தை நோக்கி அழுத்தம் கொடுக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே, அரசாங்கம் பேரிடர் நிவாரணத் தேவைகளால் ஏற்பட்ட நிதித் பற்றாக்குறை என்ற மற்றொரு சாக்குப் போக்கை இப்போது கூறுகிறது. இதன் மூலம் அது தனது தேர்தல் பயத்தை அறியாமலேயே வெளிப்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 27 புதன்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 27
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள்கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரி உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புது வேலை அமையும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். நண்பர்கள் உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப் பேச வேண்டாம். அலைச்சல் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். பணிகளை போராடி முடிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்களின் விருப்பத்தை அறிந்து கொள்வீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வியாபாரத்தில் பழையவேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிறுசிறு அவமானங்கள் ஏற்படும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். ஈகோ அதிகரிக்கும்.

**மீனம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.


# மக்கள் வெள்ளத்தில் பக்திபூர்வமாக இடம்பெற்றது செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய திருவிழா!

யாழ்ப்பாணம், மே. 27

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வரலாற்று சிறப்புமிக்க புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ, மக்கள் வெள்ளத்தில் மிகச் சிறப்பாகவும் பக்திப் பரவசத்துடனும் நடைபெற்றது.

நேற்று காலை 6:00 மணியளவில் திருச்செபமாலையுடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து, மாலை 6:30 மணியளவில் செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய அருட்பணி சபையினரின் சிறப்பில் கூட்டுத்திருப்பலி ஆரம்பமானது.

திருப்பலியானது, அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர், அருட்பணி ஜெயந்தன் பச்சேக் அடிகளாரின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.



திருப்பலியின் நிறைவாக, புனித பிலிப்பு நேரியாரின் திருச்சொரூபம் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளச் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, திரண்டிருந்த மக்கள் வெள்ளத்திற்கு மத்தியில் தேர்ப்பவனி இடம்பெற்றது.

இவ்வாண்டு திருவிழா திருப்பலியைக் கண்டு ஆசி பெற நாட்டின் பல பாகங்களிலிருந்தும், புலம் பெயர் நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பண்ணிசை பயிற்சிநெறி நிறைவு செய்த 4 ஆம் அணி மாணவர்களுக்கு சான்றிதழ்

திருமலை, மே. 27

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இணைய வழி மூலமான பண்ணிசைப் பயிற்சி நெறியினை நிறைவு செய்த 4 ஆம் அணி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகள் மன்னார் திருக்கேதீச்சரம் அன்னபூரணி கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.

காலை 8.00 மணிக்கு திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும், மாலை 2.30 மணிக்கு சான்றிதழ் வங்கும் நிகழ்வும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

வாழ்த்துரையினை திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர், திருமதி அபிராமி கைலாசபிள்ளை மற்றும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுகன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள். பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு அதிதிகளாக முல்லைத்தீவு மாவட்ட செயலக அரசாங்க அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரன் மற்றும் மன்னார் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக அண்ணமலைப் பல்கலைக்கழகத் தேவார உதவிப்பேராசிரியர் திருமுறைக் கலாநிதி திருஞானபாலச்சந்திரன் ஓதுவா மூர்த்திகள் மற்றும் தமிழ் நாடு சிதம்பரம் தேவார இசைக்கலைமாணி முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (அ)

# பெண் தொழில் முயற்சியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே. 27

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு நேற்று முன் தினம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சுயதொழிலில் தடம் பதித்து, உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்து வரும் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (அ)

# வழுக்கையாற்றை மீள உயிர்ப்பிக்கும் நோக்கில் உள்ளூராட்சி பிரதிநிதிகளுடனான களப்பயணம்

வடமராட்சி, மே. 27

யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வழுக்கையாற்றின் வழித்தடங்களிலுள்ள குளங்களை, நீர்த்தேக்கங்களை பாதுகாப்பதும் பொறுப்பாக மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர்வள ஆளுகையை நோக்கி செல்வது தொடர்பில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த வட்டார உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக செயற்திட்டத்தின் 4ஆவது கட்டமான களப் பயணமும் உரையாடலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வறுத்தலைவிளான் குளத்தடியில் காலை 9 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களும், கிராம மக்களும் ஆர்வமுடன் இணைந்து கொண்டனர்.

பேராசிரியர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இக் களப்பயணத்தில் வலிகாமம் பிரதேசத்தின் அடையாளமாக விளங்கும் பருவகால ஆறான வழுக்கையாறின் முக்கியத்துவம் பற்றிச் சிந்திக்கும் ஆற்றலுள்ள பொறுப்பானவர்களான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், அரச அலகுகள், அறிஞர் குழுக்கள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து அவர்களின் பாரம்பரிய செயற்பாட்டு அறிவையும், அதனோடிணைந்த அனுபவங்களையும் பெற்று மக்கள் அமைப்புகளை வலுப்படுத்தி வழுக்கையாற்றை உயிர்ப்பிக்கும் நோக்கிலாக அமைந்திருந்தது.



வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய நான்கு உளளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் குழுவினர் வழுக்கையாற்றின் வழித்தடங்களில் உள்ள முக்கிய நீர்நிலைகளான வறுத்தலைவிளான் குளம், சுழுவில் குளம், பினாக்கை குளம், கந்தரோடைக் குளம், சீரணி மதவு, முதலியார் குளம் ஆகியவற்றை பார்வையிட்டு வழுக்கையாற்றின் தொடர்ச்சியையும், அதனை பாதுகாத்து பராமரிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தினையும், அவற்றின் புவியியல் அமைவிடங்களையும், அதன் சுற்றுலா முக்கியத்துவங்களையும் கேட்டறிந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய நல்லிணக்கத்தை எட்ட 3 கட்டங்களாக செயல்திட்டம்!

## அமைச்சர் பிமல் கூறுகிறார்



கொழும்பு, மே. 27

தேசிய நல்லிணக்கத்தை எட்டும் நோக்கில், நாட்டின் மீட்சியை நிலைப்படுத்துதல், அபிவிருத்தி மற்றும் ஒட்டுமொத்த அமைப்பையும் மாற்றியமைக்கும் உருமாற்றம் என மூன்று கட்டங்களாக அரசாங்கம் அணுகி வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நல்லிணக்க மாநாட்டில் இருநூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட மதத் தலைவர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றபோது நிலவிய கடுமையான பொருளாதார வீழ்ச்சி தற்பொழுது ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டு, பணவீக்கம் குறைக்கப்பட்டு பொது நிறுவனங்கள் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், மத்திய கிழக்கு மோதல்கள் மற்றும் சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் அபிவிருத்தி இன்னும் சவால்களை எதிர்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய நல்லிணக்கம் என்பது பொருளாதார நீதியுடனும் பிராந்திய சமத்துவத்துடனும் இணைக்கப்பட வேண்டும் என கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, போருக்குப் பின்னரான காணி ஆக்கிரமிப்புப் பிரச்னைகள், வடக்கு கிழக்கில் நீடிக்கும் இராணுவப் பிரசன்னம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனும், மலையகத் தமிழ் மக்களின் வீடற்ற நிலை மற்றும் பொருளாதார ஓரங்கட்டல் குறித்து முன்னாள் அமைச்சர் மனோ கணேசனும் இம்மாநாட்டில் தங்களின் கவலைகளைப் பகிர்ந்துள்ளனர். (அ)

# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, மே. 27

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு எதுவும் நிலவவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இரண்டு மசகு எண்ணெய் கப்பல்கள் அடுத்த சில நாள்களுக்குள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைய திட்டமிடப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளிலிருந்து தலா 90000 மெற்றிக் தொன் மசகு எண்ணெயை ஏற்றிக்கொண்டு இக்கப்பல்கள் வருகை தரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாகச் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட தவறான வதந்திகள் காரணமாகவே சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகன வரிசைகள் அவதானிக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டியுள்ள முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி மயூர நெத்திகுமாரகே, பொதுமக்கள் இத்தகைய வீண் வதந்திகளை நம்பி ஏமாற வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். (அ)

# அரசின் நாடு கடத்தல் உத்தரவை நீக்க கோருகிறார் கெய்லி பிரேசர்

கொழும்பு, மே.27

கடந்த 2022ஆம் ஆண்டின் பிற்பகுதி முதல் இலங்கையில் தலைமறைவாக உள்ள பிரித்தானிய பிரஜையான கெய்லி பிரேசர், தமக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள நாடுகடத்தல் உத்தரவை நீக்குமாறு அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

காலி முகத்துவாரப் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டமைக்காக, அப்போதைய அரசாங்கத்தினால் இவருக்கு எதிராக இந்த நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எந்தவொரு சூழ்நிலையிலும் தாம் பலவந்தமாக நாடு கடத்தப்படுவதை விரும்பவில்லை எனவும், கறையற்ற முறையில் நாட்டை விட்டு வெளியேறவே தாம் விரும்புவதாகவும் கெய்லி பிரேசரின் சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இப்போராட்டங்களின் மூலம் அரசியல் ரீதியாகப் பயனடைந்த தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இவருக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டியுள்ள சட்டத்தரணி, இவ்விடயத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உடனடியாகத் தலையிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (அ)

# குடும்ப தகராறில் மனைவிக்கு தீவைத்த ஓட்டோச் சாரதி முல்லேரியாவில் கைது!

கொழும்பு, மே. 27

மீகஹவத்த பகுதியில் குடும்பத் தகராறு காரணமாகத் தனது மனைவியின் தலையில் பெற்றோல் ஊற்றித் தீவைத்துவிட்டுத் தப்பியோடிய கணவனை முல்லேரியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீகஹவத்த, அங்கொட பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஓட்டோ சாரதி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி மாலை ஓட்டோவில் வந்த இச்சந்தேக நபர், மனைவியின் தலையில் பெற்றோல் ஊற்றித் தீவைத்துவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இதில் முகத்திலும் மார்புப் பகுதியிலும் பலத்த தீக்காயங்களுக்குள்ளான 44 வயதுடைய குறித்த பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிகிச்சை பெற்றுவரும் நிலையிலும் அப்பெண்ணிடமிருந்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். (அ)

# தரமற்ற இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தும் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே. 27

அதிகாரபூர்வ பதிவு இலக்கத் தகடுகளை வழங்குவதில் தாமதம் நிலவியபோதிலும், மாற்றியமைக்கப்பட்ட அல்லது தரமற்ற இலக்கத் தகடுகளைப் பொருத்திய வாகனங்களைச் செலுத்த வேண்டாம் என பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுரை விடுத்துள்ளனர்.

அதிகாரபூர்வ இலக்கத் தகடுகள் இதுவரை வழங்கப்படாத போதிலும், மாற்றியமைக்கப்பட்ட அல்லது சிதைக்கப்பட்ட இலக்கத் தகடுகளைக் கொண்ட வாகனங்களைச் செலுத்துவது சட்டவிரோதமானது என போக்குவரத்து கட்டுப்பாட்டு மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இருப்பினும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய, வாகன இலக்கத்தை ஏ4 அளவிலான காகிதத்தில் அச்சிட்டு காட்சிப்படுத்துவதற்கு சாரதிகளுக்கு அனுமதி உண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழங்குநர் ஒருவர் இல்லாத காரணத்தினால், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வாகன இலக்கத் தகடுகள் வழங்கும் பணிகள் கடந்த 10 மாதங்களாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

அறிக்கைகளின்படி, இதன் விளைவாக சுமார் 400,000 இலக்கத் தகடுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அதிகாரபூர்வ இலக்கத் தகடுகளை வழங்கும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், இவ்வாறு தற்காலிகமாக அல்லது தரமற்ற முறையில் தயாரிக்கப்பட்ட இலக்கத் தகடுகளைக் காட்சிப்படுத்தும் வாகனங்களுக்கு பொலிஸார் அபராதம் விதிப்பது குறித்து சாரதிகள் தங்களது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸார், அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளுக்கு இணங்காத இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு உரிமை உண்டு எனக் கூறியுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க ரில்வின் யார்?

## இம்ரான் எம்.பி. கண்டனம்



கொழும்பு, மே. 27

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, நாட்டின் மாகாண சபைத்தேர்தல்கள் இந்த ஆண்டு நடைபெறாது என்று தன்னிச்சையாக அறிவித்திருப்பது மக்களின் இறையாண்மையை அப்பட்டமாக உதைத்துத் தள்ளும் ஒரு சர்வாதிகாரச் செயலாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஆரம்பம் முதல் எதிர்த்துவந்த மக்கள் விடுதலை முன்னணி, இவ்வாறான இழுத்தடிப்புகள் மூலம் அதனை இல்லாது செய்ய முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைக்கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு இந்த நாட்டின் தேர்தல் குறித்து தீர்மானிப்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்க விரும்புகின்றேன்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த விரும்பாத இந்த அரசாங்கம் ரில்வின் சில்வா மூலம் அதனை வெளிப்படுத்தியுள்ளது.

சிறுபான்மை மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியும், இந்த அரசாங்கமும் அந்த மக்களின் மாகாண சபை அபிலாசைகளை குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கை எடுப்பது கவலையைத் தருகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் படி, தேர்தலை நடத்துவது மற்றும் அது தொடர்பான இறுதித் தீர்மானங்களை எடுக்கும் முழுமையான அதிகாரம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவிற்கே உரியதாகும். அதேபோல், பொது நிதியை ஒதுக்குவதும், அதனை மாற்றுவதும் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நிதி அமைச்சருக்குரியது.

இந்த சட்டபூர்வமான நடைமுறைகளில் தலையீடு செய்யும் அதிகாரம் ரில்வின் சில்வாவுக்கு எப்படி வந்தது?

பாராளுமன்றத்தையோ, தேர்தல் ஆணைக்குழுவையோ மதிக்காமல், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகமான பெலவத்தையில் எடுக்கப்படும் முடிவுகளை நாட்டின் சட்டமாக திணிக்க முற்படுவது அப்பட்டமான ஜனநாயக மீறலாகும்-என்றார். (அ)

# உகந்தமலை முருகன் ஆலயத்தில் பக்தி பூர்வமான பாலஸ்தாபனம்!

அம்பாறை, மே. 27


கிழக்கின் தென்கோடியிலுள்ள வரலாற்றுப்பிரசித்திபெற்ற உகந்தமலை சிறீ முருகன் ஆலயத்தின் பாலஸ்தாபன குடமுழுக்கு விழா உகந்தமலைமுருகனாலய பிரதமகுரு சிவசிறீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

இறுதியாக இவ் ஆலயத்தில் 2014 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

எனவே ஆகம விதிப்படி 12 வருடங்களின் பின்னர் கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் என்ற விதி முறைகளுக்கமைய கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.45 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் பாலஸ்தாபன குடமுழுக்கு பெருவிழா நடைபெற்றது.

அதன் காரணமாக, இவ் வருட வருடாந்த ஆடிவேல்விழா நடைபெறமாட்டாது. அதாவது உற்சவத்தின் கொடியேற்றத்திருவிழா,15 நாள் திருவிழாக்கள் மற்றும் தீர்த்தோற்சவம் என்பன இம்முறை நடைபெறமாட்டாது என்று ஆலய வண்ணக்கர் எம்.டி. சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

எனினும், கதிர்காமத்தோடு ஒத்த ஆடிவேல் விழா உற்சவ காலத்தில் பாலஸ்தாபனம் செய்த கூடத்தில் சாதாரண பூஜைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)



# கனகர் கிராமத்தில் பொதுக்கிணறு மக்களின் பாவனைக்கு கையளிப்பு

அம்பாறை, மே. 27

பொத்துவில் மீள்குடியேற்ற கிராமமான கனகர் கிராமத்தில், அங்கு வாழும் மக்களின் மிக அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான குடிதண்ணீர் கிணறு ஒன்று உத்தியோகபூர்வமாக மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

'வெஸ்டன் தமிழர் சங்கம் கனடா' அமைப்பின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட இக்கிணறு, நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.


பொத்துவில் கனகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ். செல்வகுமாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிழ்வில், கனகர் கிராமத்துக்குப் பொறுப்பான கிராம சேவை உத்தியோகத்தர் ரி. ராஜேந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் காண்டீபன் மற்றும் உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தாயக இணைப்பாளர் என் சௌவியதாசன் மற்றும் கிராமப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'உதவும் பொற்கரங்கள்' அமைப்பின் பணிப்பாளர் விசு கணபதிப்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க, வெஸ்டன் தமிழர் சங்கம் கனடா அமைப்பினால் இந்த நிதியுதவி வழங்கப்பட்டு இக்குடிதண்ணீர் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் சுமார் 73 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், இதுவரை இரண்டு பொதுக்கிணறுகள் மாத்திரமே பாவனையில் இருந்துள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் குடிதண்ணீருக்காகவும், தமது வாழ்வாதாரத் தோட்டப் பயிர்ச் செய்கைகளுக்கான நீரைப் பெற்றுக் கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். (அ)

# காரைதீவு பிரதான வீதி வடிகால்களில் குப்பைகள்



அம்பாறை, மே. 27

காரைதீவு பிரதான வீதியோர வடிகால்கள் குப்பைகள் மற்றும் கழிவுப்பொருள்களால் நிரம்பியுள்ளதால், சிறியளவிலான மழை பெய்தால்கூட வெள்ளநீர் தேங்கும் நிலை உருவாகியுள்ளது.

இதனால் பிரதான வீதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்படுவதுடன், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மழைக்காலங்களில் வடிகால்களில் நீர் சரிவர ஓடாத காரணத்தால், மழைநீர் வீதியில் தேங்கி வெள்ளப்பெருக்கு நிலை உருவாகுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக வடிகால் சுத்திகரிப்புப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை, மூடிகளுமில்லை என குற்றஞ்சாட்டும் பிரதேச மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து வடிகால்களை சுத்தம் செய்து, நிரந்தர தீர்வை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்கு; பாராளுமன்ற உபகுழு நியமனம்

கொழும்பு, மே. 27

அநுராதபுரத்தில் பதிவாகியதாகக் கூறப்படும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பான எதிர்காலச் சட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட நிறுவன ரீதியான மற்றும் சட்ட சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உபகுழுவுக்கு ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் சமன்மலி குணசிங்க மற்றும் சட்டத்தரணி சமிந்திராணி கிரியெல்ல ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

ஹேமாலி வீரசேகர, கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, சட்டத்தரணிகளான சாகரிகா அத்தாவுட, நிலாந்தி கொட்டஹச்சி, நிலுஷா லக்மாலி கமகே, துஷாரி ஜயசிங்க, அனுஷ்கா திலகரத்ன, ஹசர லியனகே, ஹிருணி விஜேசிங்க மற்றும் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் இந்த உபகுழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தின்போது, பொது மக்களின் பலத்த கவனத்தை ஈர்த்துள்ள இச்சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியின் பாதுகாப்பு மற்றும் தற்போதைய சட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

# சரண குணவர்தனவுக்கு எதிரான 4 வழக்குகளின் தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, மே. 27

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 4 வழக்குகளின் தீர்ப்பை ஜூன் மாதம் 9ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் மொஹமட் மிஹாயில் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் சரண குணவர்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 4 வழக்குகளின் தீர்ப்பும் நேற்று அறிவிக்கப்படவிருந்தது.

எனினும், குறித்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது, வழக்குகளின் தீர்ப்புகள் இன்னும் தயாராகவில்லை என நீதவான் அறிவித்தார்.

இதற்கமைய, தீர்ப்புகளை அறிவிக்கும் நடவடிக்கை ஜூன் மாதம் 09ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு தேசிய லொத்தர் சபையின் தலைவராகப் பணியாற்றியபோது, அந்த நிறுவனத்துக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தி, முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

'கோட்டா கோ கம' தாக்குதல்

# தேசபந்துவுக்கு எதிராக 1 மாதத்தில் குற்றப்பத்திரம்

கொழும்பு, மே. 27

2022 ஆம் ஆண்டு காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம' போராட்டத்தின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக ஒரு மாதத்துக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய எதிர்பார்ப்பதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோனை சந்தேக நபராக பெயரிடுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட சட்டமா அதிபரின் கடிதத்தை செல்லுபடியற்றதாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று முன் தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத், தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அதேவேளை, குறித்த மனுவை மீண்டும் செப்ரெம்பர் 2ஆம் திகதி விசாரணைக்கு அழைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வலி.வடக்கு...

தொடர்பில் கள ஆய்வுகளையும் மேற்கொண்டாம்.

இதில் உடனடியாக விடுவிக்கப்படக்கூடிய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். குறிப்பாக வழிபாட்டு இடங்கள், பாடசாலைகள் என்பவற்றை விடுவிக்க முழுமையான நடவடிக்கைகள் எடுக்கவுள்ளோம்.

அதேவேளை, உயர்பாதுகாப்பு வலயத்தினுள் பிரதான வீதிகளின் சில பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றினை விடுவித்து, முழுமையாக அந்த வீதியை விடுவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உடனடியாக விடுவிக்கப்பட முடியாது காணப்படும் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு, விடுவிக்கப்படக்கூடிய காணிகளை எதிர்காலத்தில் விடுவிக்கப்பட நடவடிக்கை எடுப்போம். விடுவிக்க முடியாத காணிகள் தொடர்பில் காணி உரிமையாளர்களுடன் பேச்சுக்களை நடத்தி அது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளோம்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்காக எத்தனை ஏக்கர் காணிகள் தேவை என்பது தொடர்பில் ஆராயப்படுகிறது. அந்த காணிகளை வழங்குவது தொடர்பில் எதிர்காலத்தில் பேச்சுக்களை நடாத்தவுள்ளோம்.

அதே போல் விவசாயக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் அது தொடர்பிலான தரவுகளை கேட்டுள்ளோம். அந்த தரவுகள் வந்ததும் அதனையும் விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்-என்றார். (அ)

## பலாலி கிழக்கு...

பலாலி கிழக்குப் பகுதியில் உள்ள காணிகளையும் விடுவிக்க வேண்டும் என மாவட்ட செயலர் விடுத்த கோரிக்கையை அடுத்து பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் 1986 ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்துக்கான காணி விஸ்திரிக்கப்பட்டபோது அக் காணிக்கான நட்டஈடு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் மாவட்ட செயலர் பிரதி அமைச்சரிடம் தெரியப்படுத்தியபோது, விரைவில் கொழும்பில் தனியான கலந்துரையாடலில் இது தொடர்பாக ஆராய்வதாக பிரதி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பலாலி உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள வழிபாட்டுத் தலங்களில் வழிபடுவதற்கான நடவடிக்கைகளையும், வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சருடன், கடற்றொழில் நீரியல் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, யாழ்ப்பாணம் மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கே.ஜே.என்.எம்.பி.கே. நவரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

## வலி.வடக்கு உயர்...

அமைச்சர் அருண ஜயசேகர தலைமையிலான விசேட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

குறித்த குழுவினருடன் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன், யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்டவர்களும் இணைந்து இராணுவ கட்டுப்பாட்டில் மக்களின் காணிகளை நேரில் பார்வையிட்டனர்.

"மக்களின் காணிகள் மக்களுக்கே " என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய காணிகளை விடுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர், பலாலிப் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தனியார் காணிகளுக்குள் சென்று காணி விடுவிப்பு தொடர்பிலான சாத்தியங்கள் குறித்து நேரில் ஆராய்ந்தனர். அதனை தொடர்ந்து பலாலி இராணுவ வைத்தியசாலை வளாகத்தில் குறித்த குழுவினர் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (அ)

## ஜனாதிபதியின்...

சாதகமான நடவடிக்கைகளை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவிடம் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்தார்.

வடக்கு மாகாணத்துக்கு இரு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பாதுகாப்புப் பிரதி அமைச்சர், இராணுவத் தளபதி மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவினர், நேற்று முன் தினம் மன்னார் மாவட்டத்தில் கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக, நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலும் களப்பயணம் மேற்கொண்டு காணி விடுவிப்புத் தொடர்பான நேரடி ஆய்வுகளை முன்னெடுததனர்.

இந்த ஆய்வுகளின் பின்னர், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் காணி விடுவிப்புத் தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகர், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர். இவர்களுடன் இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றிய ஆளுநர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய "மக்களின் காணிகள் மக்களுக்கே" என்ற உறுதிமொழிக்குச் செயலுரு கொடுக்க வேண்டியது அதிகாரிகளாகிய அனைவரினதும் பொறுப்பாகும் என வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, "படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு மிகவும் தீவிரமான அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதிலும், படையினர் வசமுள்ள ஆனால் பயன்படுத்தப்படாத காணிகளை விடுவிக்க வேண்டும் என்பதிலும் ஜனாதிபதி மிகத் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளார்" எனத் தெரிவித்தார்.

மேலும், "காணிகளை விடுவிப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, முப்படைகளின் தளபதிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் உரிய அதிகாரிகளுடன் இணைந்து குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு நேரடியாகக் களப்பயணம் மேற்கொண்டோம். இதன்போது பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மக்கள் கோரும் குறிப்பிட்ட சில காணிகளின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய முக்கியத்துவங்கள் குறித்து நேரில் ஆராயப்பட்டது. இந்தத் தகவல்கள் மற்றும் கள ஆய்வுகளின் முடிவுகள் அனைத்தும் கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சுக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஜனாதிபதி தலைமையிலான தேசிய பாதுகாப்புச் சபையிலும், பாராளுமன்றப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவிலும் சமர்ப்பிக்கப்பட்டு விரிவாக ஆராயப்படும். தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில் காணிகளை விடுவிப்பதற்கான சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எவ்வாறாயினும், சில அதிமுக்கியமான பகுதிகளில் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும்" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், "சில குறிப்பிட்ட காணிகளை விடுவிப்பதானது சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தீர்மானங்களிலேயே தங்கியுள்ளது. எனவே, அதனுடன் தொடர்புடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக, சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர், துறைசார் செயலாளர்கள் மற்றும் உயரதிகாரிகளை உள்ளடக்கிய விசேட உயர்மட்டக் கூட்டமொன்று மிக விரைவில் ஏற்பாடு செய்யப்படும்" எனவும் பிரதி அமைச்சர் உறுதியளித்தார். (அ)

## பழைய முறையிலேயே...

இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு) ஏற்பாடு செய்திருந்த இக்கலந்துரையாடலில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் முக்கியத்துவம், அது தொடர்ச்சியாகக் காலதாமதமாவதற்கான காரணங்கள் மற்றும் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட 42 எதிர்க்கட்சிகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளில், ஒரேயொரு கட்சியைத் தவிர ஏனைய அனைத்துப் பிரிவினரும் இணைந்து ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுப் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இக்கூட்டுப் பிரகடனம் தற்போதைய பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவுக்கும் ஆளுங்கட்சிக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இக்கூட்டுப் பிரகடனத்தின் முதன்மை உடன்பாடுகள் வருமாறு-

2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத் திருத்தத்திற்கு முன்னர் நடைமுறையிலிருந்த பழைய தேர்தல் முறையின் கீழ், தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் உடன்பாடு கண்டுள்ளனர். பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் இறுதிப் பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் கிடைக்கும் வரை, இந்த பழைய தேர்தல் முறையையே தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை மட்டத்தில், தத்தமது கட்சிகளின் வேட்புமனுக்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக சுயாதீனமான அடிப்படையில் உறுதி செய்வதற்கு அரசியல் கட்சிகள் சம்மதம் தெரிவித்துள்ளன. ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்நாட்டின் முதன்மை அரசியல் தலைவர்கள் பலர் இக்கலந்துரையாடலில் நேரில் பங்கேற்றிருந்தனர்.

எதிர்க்கட்சிகள் தரப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

ஆளுங்கட்சி தரப்பில் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க கலந்துகொண்டார். அத்துடன், மாகாண சபைத் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து பாராளுமன்றத்திற்குப் பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவில், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் முழுமையாக பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்திய...

சந்தோஷ் ஜாவை நேற்று முன் தினம் நேரில் சந்தித்து, இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விசேட கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து இருதரப்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன், தற்போதைய உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதாரக் காட்சிகள் குறித்தும், அவை இலங்கை போன்ற வளரும் நாடுகளின் மீது எவ்வாறான தாக்கங்களைச் செலுத்துகின்றன என்பது குறித்தும் இருவருக்கும் இடையே ஆழமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான, பல தசாப்த கால இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது நினைவூட்டப்பட்டது. தற்போது இரு நாடுகளினதும் கூட்டுறவோடு இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைவரங்கள் குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (அ)

## இலங்கையில் கட்டுமான...

தஹம் குணரத்ன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு போன்ற பிரதான நகரங்களில் ஒரு பேர்ச் காணியின் விலை 5 முதல் 6 மில்லியன் ரூபா வரை உயர்ந்துள்ள நிலையில், நெடுஞ்சாலை இணைப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகள் காரணமாக கொழும்பை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கான காணித் தேவை அதிகரித்துள்ளது.

ஜா-எல, நீர்கொழும்பு, கஹதுடுவ, பிலியந்தலை, மாலபே ஆகிய பகுதிகளில் தற்போது ஒரு பேர்ச் காணி 1 மில்லியன் முதல் 1.5 மில்லியன் ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் கஹதுடுவ போன்ற பகுதிகளிலிருந்து கொழும்பு நகருக்குள் 20 நிமிடங்களில் பயணிக்க முடிவதும் இந்த வரவேற்புக்கு முக்கிய காரணமாகும்.

தற்போது நாட்டில் குறைந்தது 2,00,000 வீடுகளுக்கான பற்றாக்குறை நிலவுகிறது. அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான தேவை அதிகரித்து வரும் போதிலும், வாங்குபவர்களின் வரவுசெலவுத் திட்டத்திற்கும் சந்தையில் உள்ள வீடுகளின் விலைகளுக்கும் இடையே பெரும் இடைவெளி காணப்படுகிறது.

இளம் தலைமுறையினர் வேலைவாய்ப்புக்காக கொழும்பை நோக்கி நகர்வதால், அவர்களின் உண்மையான வருமான நிலைக்கு ஏற்ப, மலிவு விலை வீடமைப்புத் திட்டங்களையும், விசேட நிதி வசதிகளையும் அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து அவசரமாக உருவாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## மாகாணசபை...

திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா யாழ்ப்பாணத்தில் அண்மையில் வெளியிட்டிருந்த கருத்து குறித்து கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியவை வருமாறு-

"தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் அரசுக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. அதற்கான பணம் ஏற்கனவே வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற் தேர்தல் சட்ட விதிகளில் உள்ள முரண்பாடுகளும் சிக்கல்களுமே பிரதான காரணமாகும்.

இந்தச் சட்டச் சிக்கல்களுக்குத் தகுந்த தீர்வு காண்பதற்காகத் தற்போது விசேட நாடாளுமன்றக் குழுவொன்று நியமிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

இது தொடர்பான தொழில்நுட்ப ரீதியான கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாராளுமன்றக் குழுவின் மூலம் தேவையான சட்டக் கட்டமைப்பு சீர்செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்டவுடன், மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் 8 மாதங்களுக்குள் பொதுத்தேர்தல் மற்றும் உள்ளாட்சிசபைத் தேர்தல் என்பவற்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது." - என்றார். (அ)

## யாழ்.மாநகரசபை...

ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரில், புதிதாக அமையப்பெற்று வரும் மாநகரசபை கட்டடத்துக்கு அருகில் உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் பெறுமதிமிக்க ஆதனமொன்று, வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனிநபர் ஒருவருக்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு, வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தால், முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைவாக, சர்ச்சைக்குரிய ஆதனத்தை ஆளுநர் தலைமையிலான குழுவினர் நேற்று செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டார்.

குறித்த ஆதனமானது யாழ். மாநகர சபைக்கு உரித்தானது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலான உத்தியோகபூர்வ ஆவணங்கள் மற்றும் நில அளவைத் திணைக்கள வரைபடங்கள் என்பன தம்மிடம் உள்ளமை தொடர்பில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் இதன்போது ஆளுநருக்குத் தெளிவுபடுத்தினர்.

ஆயினும், குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சோலை வரியும் அறவிடப்பட்டுள்ளமை குறித்தும் இதன்போது ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

விடயங்களை விரிவாக ஆராய்ந்த ஆளுநர், குறித்த ஆதனம் தொடர்பான சந்தேகத்துக்கிடமான பெயர்மாற்றம் மற்றும் வரி அறவீட்டு விடயங்களைக் கையாண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், முறையற்ற விதத்தில் தனிநபர் வசமாகியுள்ள குறித்த ஆதனத்தை மீள மாநகர சபைக்கு மீட்டெடுப்பதற்காகத் துரிதமாக நீதிமன்றப் பொறிமுறைகளை நாடுமாறும் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த விசேட கள ஆய்வின்போது, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாநகர சபையின் ஆணையாளர், யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர், உரிய பிரிவின் கிராம அலுவலர் மற்றும் காணி அலுவலர் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# ராஜிதவின் வெளிநாட்டு பயணத் தடை நீக்கம்!

கொழும்பு, மே. 27

ஊழல் குற்றச்சாட்டு வழக்கு ஒன்றுடன் தொடர்புபட்ட நிலையில், தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் தற்காலிகமாக நீக்கியுள்ளது.

முன்னாள் அமைச்சரின் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ். போதரகம்ம நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நீதிமன்றத்தில் முன்னிலையான பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள், ராஜித சேனாரத்ன மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதாக நீதவானிடம் தெரிவித்ததுடன், பயணத்தடையை தற்காலிகமாக தளர்த்துமாறு கோரினர்.

இந்த சமர்ப்பிப்புகளை ஆராய்ந்த பிரதம நீதவான், ஜூன் மாதம் 2ஆம் திகதி வரை குறித்த வெளிநாட்டு பயணத்தடையை நீக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

# ஆடைத்தொழிற்சாலை பஸ் வயலில் கவிழ்ந்து விபத்து!

## 19 பேருக்கு காயம்

கொழும்பு, மே. 27

தியகம, கஹதுடுவ பகுதியில் நேற்று முன் தினம் இரவு ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் கடமை புரியும் ஊழியரகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று சாலையிலிருந்து விலகி வயலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில்19 பேர் லேசான காயங்களுடன் தப்பியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீதியில் மற்றொரு வாகனத்திற்கு வழிவிட முயன்றபோது பஸ் விலகிச் சென்றதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தை அடுத்து பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக ஹோமகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# வேலணை மத்திய கல்லூரியின் விதுர்சினி யாழ்.மாவட்ட கரம் அணிக்கு தெரிவானார்!

யாழ்ப்பாணம், மே. 27

கரம் போட்டியில் வேலணை மத்திய கல்லூரி மாணவி ஜெ.விதுர்சினி, யாழ் மாவட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்யும் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது.

இதில் ஜெ.விதுர்சினி நடைபெற எட்டு போட்டிகளில் ஏழு போட்டிகளில் வெற்றி பெற்று மாவட்ட அணிக்குள் இடம் பிடித்துள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜூன் 13 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாகாணமட்ட போட்டியில் யாழ் மாவட்ட அணிசார்பில் கலந்துகொள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முதலீட்டாளர்களுக்கு வடக்கில் அனுமதிகளை இலகுவாக்க “ஒருவழி முதலீட்டு நுழைவாயில்”!

## மாகாண ஆளுநர் நேற்று ஆரம்பித்து வைத்தார்



யாழ்ப்பாணம், மே. 27

முதலீட்டாளர்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டு வந்த மிகப் பெரிய சவால்களுக்குத் தீர்வு காணும் வகையில், இலங்கையிலேயே முதற்தடவையாக “ஒருவழி முதலீட்டு நுழைவாயில்” வடக்கு மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த டிஜிற்றல் செயற்றிட்டத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

வரவேற்புரையை நிகழ்த்திய ஆளுநர்,

“இந்த நுழைவாயிலானது வெறும் டிஜிற்றல் தளம் மாத்திரமன்றி, இது ஒரு மாற்றத்தின் அடையாளமாகும்”

நாம் ஆரம்பித்து வைக்கும் இந்த மாகாண மாதிரியானது, இலங்கை முழுவதுக்குமான ஒரு தேசியக் கட்டமைப்புக்கான அடித்தளத்தையும் அமைத்துக் கொடுக்கின்றது.

முதலீட்டாளர்கள் இங்குள்ள திணைக்களங்களின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் காலதாமதங்களால் விரக்தியடைந்த சம்பவங்கள் கடந்த காலங்களில் பலமுறை இடம்பெற்றுள்ளன. அனுமதி நடைமுறைகளில் உள்ள நீண்ட பொறிமுறையே இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

இவற்றையெல்லாம் சீர் செய்யும் வகையிலேயே முதலீட்டாளர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த “ஒருவழி முதலீட்டு நுழைவாயில்”, அதாவது ஒற்றைச் சாளர முறைமை உருவாக்கப்பட்டு தற்போது பொதுத்தளத்திற்குப் பகிரப்பட்டுள்ளது.

இதன்மூலம் உலகின் எந்த மூலையில் இருப்பவர்களும் வடக்கு மாகாணத்தை நோக்கித் தமது முதலீடுகளைக் கொண்டுவர மிக இலகுவாக அணுகமுடியும்.

இந்தச் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன், - என்றார்.

அவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் சென்னையிலுள்ள இலங்கைத் துணை தூதுவர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

அதன்பின்னர், “ஒருவழி முதலீட்டு நுழைவாயில்” ஆளுநரால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், “வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு -2026” இன் இறுதி அறிக்கையும் ஆளுநர் உள்ளிட்ட அதிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், மன்னார் மாவட்டச் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல், வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், யாழ். மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. முகவர் அமைப்புக்கள், வர்த்தக மற்றும் வணிக அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ)

# சட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தல் நடக்கும்!

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே. 27

நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து அரசியல்வாதிகள் வெளியிடும் கருத்துக்களைத் தாம் கருத்திற்கொள்ளப் போவதில்லை எனவும், சட்ட ரீதியான சிக்கல்கள் தீர்க்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை இந்த ஆண்டு நடத்த முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கூற்று குறித்துக் கருத்து வெளியிடும்போதே ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

தேர்தல் குறித்து அரசியல்வாதிகள் இத்தகைய கருத்துக்களை வெளியிடுவது பொருத்தமற்றது எனச் சுட்டிக்காட்டிய அவர், ஆணைக்குழு எப்போதும் நாட்டின் சட்ட நிலவரத்துக்கு அமைவாகவே செயற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் தேசிய வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், “டித்வா” சூறாவளி நிவாரணப் பணிகளுக்காகத் தேர்தல் நிதிகள் திருப்பப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளையும் நிராகரித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் மாகாண சபைத் தேர்தல் முறையில் ஏற்பட்ட சட்டச் சிக்கல்கள் காரணமாகவே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், தற்பொழுது அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள 11 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு, மிகவும் பொருத்தமான தேர்தல் கட்டமைப்பு குறித்த பரிந்துரைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தவுடன் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# பாசையூரில் காணி உரித்து ஆவணம் இல்லாத மக்களுக்கு உறுதிகள் வழங்கப்படல் வேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி கோரிக்கை!

யாழ்ப்பாணம், மே. 27

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக பாசையூரில் வாழ்ந்துவரும் மக்களுக்கு அவர்களது காணிகளுக்கான உரித்து ஆவணங்கள் வழங்கப்படவில்லை. அதனால் அவர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனை வலியுறுத்தினார்.

அவர்களுக்கான காணி உறுதிகளை வழங்குவதற்கு ஏற்ற வகையில் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு உறுதிகளை உடனடியாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# நீரில் மூழ்கி ஆசிரியர் பலி!

கொழும்பு, மே. 27

மாணவர்களுடன் இணைந்து களச்சுற்றுலா சென்ற ஆசிரியரொருவர் அம்பாந்தோட்டை மாவட்டம், கிரிந்த கடற்கரைப் பகுதியில் நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மொனராகலை மாவட்டம், படல்கும்புர, வைக்கும்புர தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த 9 மாணவர்கள், 4 ஆசிரியர்கள் அடங்கிய குழுவொன்று கதிர்காமம் பகுதிக்கு களச்சுற்றுலா சென்றுள்ளனர்.

குறித்த குழுவினர் கிரிந்த கடற்கரைப் பகுதியில் நீராடச் சென்ற நிலையில் பாடசாலையின் கணிதப் பாட ஆசிரியரான என்.பி.எம்.நுஜூம் என்பவர் திடீரென கடல் அலையில் சிக்கி மூழ்கியதாக தெரியவருகிறது. இதனையடுத்து குறித்த பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல், மீட்பு நடவடிக்கையின்போது அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் மாணவர்கள், ஆசிரியர்கள், அப் பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media